**கவனிக்க.-** 2010.04.01 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1649 - 2010 අප්‍රේල් මස 09 වැනි සිකුරාදා - 2010.04.09**

*1649 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 754 |
| துணைவிதிகள் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |
| வரவு செலவுக் கூற்றுகள் | - |
| வரவு செலவு திரட்டுகள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தில், வராராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2010, ஏப்பிறல் மாதம் 16 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2010, ஏப்பிறல் மாதம் 01 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2010 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

**கல்கமுவ பிரதேச சபை**

*நிறைவேற்றப்பட்ட இடைக்கால நியதிச் சட்டத்தை அங்கீகரித்தல்*

*பிரதேச சபைகள் சட்டத்தின் 122, 123 ஆம் இலக்க சரத்தின் பிரகாரம் கல்கமுவ பிரதேச சபைக்கு கிடைக்கப்பெற்றுள்ள அதிகாரத்தின் பிரகாரம் - 1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி தாபனங்களின் (நிறைவேற்றப்பட்ட இடைக்கால நியதிச் சட்டத்தை) சட்டத்தின் 02 ஆம் விதியின் மூலம் உள்ளூராட்சி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரினால் தயாரிக்கப்பட்ட 1988.08.23 ஆந் திகதியுடைய 520/7 ஆம் இலக்க விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதுமான நிறைவேற்றப்பட்ட இடைக்கால நியதிச் சட்டத்தின் 01 முதல் 42 வரையிலான விருப்புரைகள் கல்கமுவ பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் இந்த அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் திகதியிலிருந்துஅமுலாகும்படி ஏற்றுக்கொள்வதற்கு கல்கமுவ பிரதேச சபையினால் 2009 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 26 ஆந் திகதி நடைபெற்ற சபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

எச். கே. விமலரத்ன,
தலைவர்,
கல்கமுவ பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
கல்கமுவ.
2010, செத்தெம்பர் 30.

4-190

---

**வலிகாமம் வடக்கு பிரதேச சபை**

*கீழே உப அட்டவணையில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளவர்களால் 2010 ஆம் ஆண்டிற்கான மாட்டிறைச்சிக்கடை நடாத்துவதற்கு அனுமதிப்பத்திரம் கோரப்பட்டுள்ளது. இந்த இடத்தில் குறித்த விடயத்திற்காக அனுமதிப்பத்திரம் வழங்குவதில் வலிகாமம் வடக்கு பிரதேச சபை எல்லைக்குள் வசிப்பவர்கள் ஆட்சேபம் தெரிவித்தால் குறித்த ஆட்சேபம் தெரிவிப்பதற்கான காரணத்தை இந்த வர்த்தமானிப் பத்திரிகை வெளியான திகதியிலிருந்து 14 நாளைக்குள் இரண்டு பிரதிகள் சகிதம் எனக்கு முன்வைக்குமாறு இறைச்சிக்காக மிருகங்கள் கொல்லப்படுவது சம்பந்தமான கட்டளைச் சட்டத்தின் (272 ஆம் அதிகாரம்) 7 ஆவது பிரமாணத்தின் பிரகாரம் இத்தால் அறியத்தருகின்றேன்.*

திரு. இ. அருணகிரி,
செயலாளர்,
வலி.வடக்கு பிரதேச சபை,
மல்லாகம்.

வலி. வடக்கு பிரதேச சபை,
மல்லாகம்.
2010.03.10.

**அட்டவணை**

| | விண்ணப்பதாரியின் பெயர் முகவரி | மாட்டிறைச்சி விற்பனைக்கான நிலையம் |
|---|---|---|
| 01. | திரு. கந்தர் சிவலிங்கம், கும்பலை, அளவெட்டி | கும்பலை மாட்டிறைச்சிக் கடை |
| 02. | திரு. பொன்னையா நாகேஸ்வரன், சேர்ச் லேன், மல்லாகம் | மல்லாகம் மாட்டிறைச்சிக் கடை |

4-192

---

**அரநாயக்க பிரதேச சபை**

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 14 ஆம் மற்றும் 24(2) ஆம் பிரிவின் உறுப்புரைகளுக்குக் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 24 ஆவது உறுப்புரைக்கு அமைய சப்ரகமுவ மாகாணத்தில் கேகாலை மாவட்டத்தின் அரனாயக பிரதேச சபையினால் எழுத்து வடிவில் காட்டப்பட்டுள்ள பாதைகள் அரநாயக பிரதேச சபைக்குச் சொந்தமான பாதைகள் என இத்துடன் பிரகடனப்படுத்தப்பட்டு அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.*

தற்போது பிரதேச சபையினால் அளக்கப்பட்டு அடையாளமிடப்பட்டுள்ள இப்பாதைகள் தொடர்பாக குறிப்பிட்ட காணி உரிமையாளர்களால் யாதாயினும் எதிர்ப்புக்கள் தெரிவிக்கப்படுவதாயின் இவ்வறிவித்தல் விடுக்கப்பட்ட திகதியிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் தமது உரிமையை நிரூபிப்பதற்கு 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 24 (2) ஆம் உறுப்புரைக்கு அமைய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இத்துடன் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.

டப். ஆர். காமனி சனத் பண்டார,
தலைவர்,
பிரதேச சபை அரநாயக.

பிரதேச சபை அலுவலகம்,
அரநாயக.
2010.03.02.

| | |
|---|---|
| பாதையின் பெயர் | : பரகஹபீல்ல தெனிய பாதை |
| பாதையின் ஆரம்பமும் முடிவும் | : அரனாயக்கவில் இருந்து ஹெம்மாதகம பாதையில் வணக்கத்திற்குரிய இந்துல்கொடை ஞானானந்த தேரர் அவர்களுக்குரிய கனேகும்புர எனும் காணியில் ஆரம்பித்து திரு. பீ. எம். ஹீன்பண்டா அவர்களுக்கு உரித்தான பீல்லதெனிய கும்புர எனும் காணியில் பிரதான பாதையுடன் இணையும். |
| கிராம அதிகாரிப் பிரிவு | : இல. 41 டீ ரந்திலிகல |
| பாதையின் நீளம் | : 477 மீற்றர் அகலம் : 08 அடி |

பாதையின் ஆரம்பம் முதல் இறுதி வரை பாதையின் இடப்பக்கமாகவுள்ள காணியின் பெயர்களும் காணி உரிமையாளர்களின் பெயர்களும்:

| | | |
|---|---|---|
| 1. | வண. இதுன்கொட ஞானானந்த தேரர் | கனேகும்புர |
| 2. | திரு. பீ. கே. புஞ்சிபண்டா | ஹானாபொக்க கும்புர |
| 3. | திரு. ஈ. ஆர். மத்தும பண்டா | பல்லகே கும்புர |
| 4. | திரு. ஆர். எம். ஹீங்பண்டா | பல்லகே கும்புர |
| 5. | திரு. டி. எச். விஜேஹாமி<br>திருமதி எஸ். டப். சுமனாவதி<br>திரு. டி. எச். பியரத்ன | தெம்பிலிமுலபேல கும்புர |
| 6. | திரு. ஆர். எச். ஜயசேன | உடஹகே கும்புர |
| 7. | திரு. யூ. ஆர். டிகிரி பண்டா | உடஹகே கும்புர |
| 8. | திரு. எஸ். டப். சுமனசிரி | ஹேூ கும்புர |
| 9. | திரு. டி. எச். விஜேஹாமி<br>திரு. டி. எச். பியரத்ன<br>திருமதி எஸ். டப். சுமனாவதி | ஹேூ கும்புர |
| 10. | திரு. டி. எச். ஜுவன் அப்பு | அஸ்ஸெந்தும கும்புர |
| 11. | தி. பி. எம். ஹீங்பண்டா | பீல்லதெனிய கும்புர |

பாதையின் ஆரம்பம் முதல் இறுதி வரை பாதையின் வலப்பக்கமாகவுள்ள காணியின் பெயர்களும் காணி உரிமையாளர்களின் பெயர்களும்:

| | | |
|---|---|---|
| 1. | வண. இதுன்கொட ஞானானந்த தேரர் | கனேகும்புர |
| 2. | திரு. பி. எம். கருணாதிலக | முடுமே கும்புர |
| 3. | திரு. எம். ஜீ. சுனில் தர்மசேன | முடுமே கும்புர |
| 4. | திரு. எஸ். டப். சுகததாஸ | உனுமுவ இடம |
| 5. | திரு. டி. எச். ஜுவன் அப்பு | உடஹவத்த இடம |
| 6. | திருமதி எஸ். டப். சுமனாவதி | பில்லேவே இடம |
| 7. | திரு. டி. எச். ஜுவன்அப்பு | அஸ்வெத்தும கும்புர |

உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் திரு. எச். எம். ஆர். டீ. கே. ஹேரத் அவர்களின் 2009.06.20 ஆந் திகதி கொண்ட 6041 ஆம்இலக்க திட்டப்படத்திற்கு ஏற்ப.

| | |
|---|---|
| பாதையின் பெயர் | : திப்பிட்டிய புதவத்த பாதை |
| பாதையின் ஆரம்பமும் முடிவும் | : திப்பிட்டிய புதவத்த பாதையில் இருந்து திப்பிட்டிய நகரத்தினூடாக வில்பொலை வரையுள்ள பாதை. |
| கிராம அதிகாரிப் பிரிவு | : திப்பிட்டிய |
| பாதையின் நீளம் | : 276 மீற்றர் அகலம் : 10 அடி |

பாதையின் ஆரம்பம் முதல் இறுதி வரை பாதையின் இடப்பக்கமாகவுள்ள காணியின் பெயர்களும் காணி உரிமையாளர்களின் பெயர்களும்:

| | | |
|---|---|---|
| 1. | திரு. எஸ். எல். எம். அஸீஸ் மற்றும் ஏனையோர் | வலவ்வேவத்த |
| 2. | திரு. என். ஜீ. நிமல்சிரி | உடம்அம்பேவத்த |

| | |
|---|---|
| 3. திரு. பி. சோமரத்ன மற்றும் ஏனையோர் | படஹெலகேவத்த |
| 4. திரு. பி. வை. ஸலாரிஸ் மற்றும் ஏனையோர் | குரும்பாபிட்டியே ஆரச்சிலாகே வத்த |
| 5. திப்பிட்டிய ராஜகிரி மல்பா ரஜமகா விகாரய | பல்லேநாயஉல்ல கும்புர |

*பாதையின் ஆரம்பம் முதல் இறுதி வரை பாதையின் வலப்பக்கமாகவுள்ள காணியின் பெயர்களும் காணி உரிமையாளர்களின் பெயர்களும்*

*1. திப்பிட்டிய ராஜகிரி மகா வித்தியாலயத்தின் விளையாட்டு மைதானம்*

*2009.06.30 ஆந் திகதி கொண்டதும், 3334-61/6/2 ஆம் இலக்க பட வரைபுத் திட்டப்படத்திற்கு ஏற்புடையதாகும்.*

*4-278*

---

**மாவத்தகம பிரதேச சபை**

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டம்*

**14 ஆம், 24(2) ஆம் விதியின் கீழ் செய்யப்படுகின்ற அறிவித்தல்**

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 24 ஆம் விதியின் கீழ் வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், மாவத்தகம பிரதேச சபையினால் இங்கு இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள பாதையினை மாவத்தகம பிரதேச சபைக்குச் சொந்தமான பாதையாக வெளிப்படுத்தப்படுவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*இந்தப் பாதைக்கு சம்பந்தமாக குறிப்பிட்ட காணிச் சொந்தக்காரர்களாக உரிமைகோரும் தரப்பினர்களினால் ஏதும் எதிர்ப்புக்கள் தெரிவிப்பதாயின் இந்த அறிவித்தல் வெளியிடப்பட்டு ஒருமாத கால எல்லைக்குள் தங்களது உரிமையினை உறுதிப்படுத்துவதற்காக 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 1 ஆம், 24(2) ஆம் வீதியின் கீழ் செயற்படும்படி இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*இந்தக் கால எல்லைக்குள் ஏதும் எதிர்ப்புக்கள் முன்வைக்கப்படாதவிடத்து அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பாதையினை மாவத்தகம பிரதேச சபைக்குச் சொந்தமான பாதையாக ஏற்றுக் கொண்டு பரிபாலனம் செய்யப்படும் என்று பொது மக்கள் தெரிந்து கொள்வதற்காக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.*

*எச். எஸ். கே. பி. மீகொல்ல,*
*தலைவர்,*
*மாவத்தகம பிரதேச சபை,*

*பிரதேச சபை அலுவலகம்,*
*மாவத்தகம.*
*2004.03.19.*

**அட்டவணை**

| | |
|---|---|
| *பாதையின் பெயர்* | : தாராபொத்த புபுது மாவத்தை |
| *ஆரம்பம்* | : லிந்தபிடிய, உதானகமத பாதையில் (பீலிகட பாதையில்) தாராபொத்த சந்தி |
| *முடிவு* | : திரு. அநுர அவர்களின் வீட்டினருகே |
| *பாதையின் நீளம்* | : 580 அடி |
| *பாதையின் அகலம்* | : 10-13 அடி |

**பாதையின் எல்லைகள்**

| பாதையின் இடது எல்லை | பாதையின் வலது எல்லை |
|---|---|
| 01. திரு. கே. ஜீ. ரஞ்சித்குமார தர்மசேன | 01. திரு. ஆர். டி. வீரசேன |
| 02. திருமதி பீ.கருணாவதி | 02. திரு. பி. தர்மபால |
| 03. திருமதி குனசேன | 03. திருமதி ஆர். டி. கல்யானவதி |
| 04. திரு. ஆர். டி. நவரத்ன | 04. திரு. ஆர். டி. விக்ரமரத்ன |
| 05. ஆர். டி. சுனில் தஸநாயக்க | 05. திருமதி நிலூகா தயானி |
| 06. திரு. எம். டி. விஜேசிரி | 06. திரு. பி. தர்மபால |

*4-291*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.